# ஹாஜிகளின் முக்கிய கேள்விகள்

1. இபாளா, ஸயீயை பிற்படுத்தலாமா?

கேள்வி : பிறை 10,11,12,13 ஆகிய அய்யாமுத் தஷ்ரீக்குடைடய நாட்களில் உடல் நலிவு, நோய், வயோதிகம் காரணமாக மக்கா சென்று தவாபுல் இஃபாளாவும், ஹஜ்ஜுடைய ஸயீயும் செய்ய இயலாத போது பிறை 13 க்குப்பிறகு அவற்றை நிறைவேற்றலாமா ?

பதில் : இரண்டுமே ஹஜ்ஜுடைய ருக்னுகள். இவற்றைத் தாராளமாக நிறைவேற்றலாம். இயலாத போது உடலை வருத்திக்ககொள்ள வேண்டியதில்லை. இறைவன் ஒருமனிதனின் சக்திக்கு மேல் சிரமப்படுத்த விரும்புவதில்லை.

**(ஆதாரம் 2:286, 6:152, 7:42, 65:7, 2:2:33, 23:62)**

2. முஸ்தலிபாவில் தங்க முடியாதபோது?

கேள்வி: முஸ்தலிபாவுக்கு நெரிசலினால் வந்து சேர முடியவில்லை.பேருந்து நேராக மினாவுக்கு வந்துவிட்டது. இந்த நிலையில் முஸ்தலிபாவில் தங்கும் வாஜிபு விட்டுப்போகிறது. இப்போது என்ன செய்வது?

பதில் :வாஜிபு விட்டுப்போவதால் அதற்குப் பிராயச் சித்தமாக ஒரு தமு மிருகபலி கொடுக்கவேண்டும். அதற்கு இயலவில்லையென்றால்,மூன்று நாட்கள் நோன்பு நோற்கவோ, அதற்கும் இயலவில்லை யென்றால் ஆறு ஏழைகளுக்கு உணவளிக்கவோ செய்ய வேண்டும்.

3. கேள்வி: முஸ்தலிபா வந்தும், வாகனத்திலிருந்து இறங்க முடியாது அதிலேயே பஜ்ரு வரை இருக்க நேரிட்டது. அவ்வாறாயின் அதற்காக தமு கொடுக்க வேண்டுமா?

பதில் : வாகனம் முஸ்தலிபாவின் எல்லையிலேயே நின்று கொண்டிருந்ததால் நீங்கள் முஸ்தலிபாவில் தங்கியதாகவே கருதப்படும். எனவே தமு கொடுக்க வேண்டியதில்லை.

மஃரிபும் இஷாவும் அரபாவிலேயே தொழலாமா?

4. கேள்வி: அரபாவிலிருந்து புறப்பட மிகவும் காலதாமதமாகி, இஷாவுடைய நேரம் (வக்து) முடிவதாக இருந்தால் மஃரிபும் இஷாவும் அரபாவிலேயே தொழலாமா?

5. பதில்: நீங்கள் காலதாமதமாயினும் முஸ்தலிபாவுக்கு வந்து தான் மஃரிபும் இஷாவும் தொழவேண்டும். இஷாவுடைய நேரம் தவறிவிடும் என அஞ்சினால் அரபாவிலோ, வழியிலோ தொழுது கொள்ளலாம்.

7. கேள்வி: அரபாவிலிருந்து மஃரிபுக்கு முன்னரே எங்களை அழைத்துச் சென்றுவிடுகிறார்கள். அதற்காக தமு கொடுக்கவேண்டுமா ?

பதில் : ஆம். தமு கொடுக்கவேண்டும். அரபாவில் சூரியன் அஸ்தமிப்பது வரை தங்குவது வாஜிபாகும். வாஜிபை விட்டுவிட்டதால் தமு கொடுக்கவேண்டும்.

மினாவில் தங்க முடிவில்லையென்றால்?

8. கேள்வி: அய்யாமுத்தஷ்ரீக்குடைய நாட்களில் மினாவில் தங்காமல் முஸ்தலிபாவில் தங்கினால்

தவறாகுமா? அதற்காக தமு கொடுக்கவேண்டுமா? எங்களுக்கு (டென்ட்) கூடாரம் முஸ்தலிபாவில் தான் தந்துள்ளார்கள்.

பதில் :முஸ்தலிபாவில் தங்குவது வாஜிபாகும். இன்று மினாவில் இடநெருக்கடியால் மினாவை ஒட்டி டென்டை முஸ்தலிபாவில் தான் கொடுக்கிறார்கள். உள்ளூ ரிலிருப்பவர்களும் மினாவில் இடம் கிடைக்காது முஸ்தலிபா எல்லையில் தான் தங்குகிறார்கள்.

அந்த டென்ட் மினாவை ஒட்டி இடைவெளிவிடாது தொடர்ந்து அமைக்கப்பட்டு அதில் தங்குவதானால் குற்றமில்லை. டென்ட் இடைவெளிவிட்டு தொடர்பு இல்லாமல் விலகி இருந்தால் மினாவில் தங்கியதாக ஆகாது. அதற்காக பிராய சித்தம் தமு கொடுக்க வேண்டும்.

### தவாபுல் இஃபாளாவை விட்டுவிட்டால் !

9. கேள்வி: மாதவிடாய் காரணமாக பெண்கள் தவாபுல் இபாளாவை நிரைவேற்ற முடியவில்லை. தாயகத்திற்குத் திரும்பவும் வேண்டும்? பயணத்தை காலதாமதமும் செய்ய முடியாது. இந்த நிலையில் தவாபுல் இபாளாவை விட்டுவிடலாமா? என்ன செய்வது?

பதில் : தவாபுல் இஃபாளா ஹஜ்ஜின் ருக்னுகளில் ஒன்றாகும் .அதைவிட்டுவிட்டால் ஹஜ்ஜு நிறைவேறாது. ஊருக்குத்திரும்பினாலும் மீண்டும் வந்து அந்தக் கடமையை கட்டாயம் நிறைவேற்றியே ஆகவேண்டும். அவ்வாறு திரும்பி வருவதற்குரிய வாய்ப்புக் கிடைப்பது இயலாது போனால் என்ன செய்வது என்பது பற்றி மார்க்க அறிஞர்கள் ஆய்வு செய்து பின்வருமாறு பரிந்துரைக்கின்றனர்.

முதலாவதாக பயணத்தை தள்ளிப்போட்டு விமானப்பதிவை (டிக்கட்டை) மாற்றுவதற்கு முயற்சிக்கவேண்டும்.
இரண்டாவதாக, அவ்வாறு கிடைக்கவில்லையென்றால் பிந்திய தேதிகளில் சம்பத்தப்பட்ட பெண்மணியை மட்டும் வேறு நெருங்கிய உறவினருடன் பயணம் செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும்.
மூன்றாவதாக, அதற்கும் இயலாதபோது, அந்தப் பெண்மணி ஊருக்குத் திரும்பித்தான் ஆகவேண்டு மென்ற நிர்பந்த நிலை ஏற்பட்டால் இறுதிகட்டமாக, ‘அவள் குளித்துவிட்டு மறைவிடத்தில் துணி,பஞ்சு, கோர்பிரீபேடு  போன்றவற்றால் பாதுகாப்புச் செய்து விரைவாக தவாபுல் இபாளாவை முடிக்கவேண்டும்.

### 10. தவாபுல் விதா செய்யாது ஊர் திரும்பலபமா?

கேள்வி: தவாபுல் வதா செய்யாமல் ஊருக்குத் திரும்பலாமா? குறிப்பாக மாதவிலக்கான பெண்கள் ஊருக்குப் புறப்படலாமா?

பதில் : தவாபுல் வதா (பயண தவாபு) ஹஜ்ஜின் இறுதி வணக்கமாக  இருக்கவேண்டும் என்பது பெருமானாரின் பொன் மொலியாகும்

**(ஆதாரம்: புகாரி 1755)**

ஹஜ்ஜுக்கு வந்திருப்போர் அனைவரும் ஹஜ்ஜின் எல்லா கடமைகளையும் முடித்துவிட்டு இறுதியாக பயண தவாபை நிறைவேற்றிய பின்னர் மக்காவிலிருந்து வெளியேறிவிடவேண்டும்.

ஆனால் இதில் மாதவிடாய்ப் பெண்களுக்கு மட்டும் பயணதவாபு செய்யாமல் பயணம் செய்ய அனுமதி யிருக்கிறது.

இப்னு அப்பாஸ் (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கிறார்கள். ‘இறையில்லம் கஃபாவை தவாப் செய்வதை ஹஜ்ஜின் கடைசி வழிபாடாக ஆக்கிக் கொள்ள வேண்டும் என மக்கள் கட்டளையிடப் பட்டார்கள்.ஆயினும் மாதவிடாய் பெண்களுக்கு மட்டும் சலுகை வழங்கப்பட்டுள்ளது.

**(ஆதாரம் புகாரி: 1755)**

ஆயிஷா (ரலியல்லாஹு அன்ஹா) அவர்கள் அறிவிக்கிறார்கள்:- நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் மற்றொரு மனைவியான ஸபிய்யா பின்த் ஹுயை (ரலியல்லாஹு அன்ஹு) அவர்களுக்கு மாதவிடாய் ஏற்பட்டதை நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் விடம் தெரிவித்தேன். அப்போது நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்’ நம்மை (மக்காவிலிருந்து செல்லவிடாமல்) தடுத்து விட்டாரா? எனக்கேட்டார்கள். அதற்கு நாயகத் தோழர்கள், அவர்கள் தவாபுல் இஃபாளா செய்துவிட்டார்கள் எனக்கூற, நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ‘அப்படியானால் பரவாயில்லை.(நாம் போகலாம்) என்றார்கள்.

**(ஆதாரம்: புகாரி:1757)**

‘தவாபுல் இஃபாளா செய்துவிட்டால் மக்காவை விட்டுச் செல்ல மாதவிடாய் பெண்களுக்கு சலுகை வழங்கப்பட்டுள்ளது’ அறிவிப்பவர்: இப்னு அப்பாஸ் (ரலியல்லாஹு அன்ஹு)

குறிப்பு: தவாபுல் வதா-பயண தவாபை-முடித்தபின்னர் மக்காவில் தங்குவாக இருந்தால் மீண்டும் பயண தவாபு செய்யவேண்டும்.

www.bathusha.com
Tamil Islamic Online Radio 24h

**உண்மையும் நன்மையும் உன்னிலும் என்னிலும் உண்டாகட்டும்**

**AL ALIM S.A.M.SEYED JAHAN MOWLANA HUSAINY JALALIY**
**BATHUSHA.COM**